மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 351, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

351—

துணை மின் நிலையம்

***5684—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, பொன்னமராவதி பேரூராட்சியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருமயம் தொகுதி, பொன்னமராவதி பேரூராட்சிப் பகுதிக்கு 5 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கொன்னையூரில் 110/11 கிலோ வோல்ட்-10 எம்.வி.ஏ. திறனுள்ள மின்மாற்றியுடன் அமைந்துள்ள துணை மின் நிலையத்திலிருந்து தற்போது சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. கொன்னையூர் பகுதியின் மின் பளு 6 எம்.வி.ஏ. ஆகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள பொன்னமராவதி பேரூராட்சிப் பகுதியின் மின் பளு 3 எம்.வி.ஏ. ஆகும். ஆக மொத்தம் இந்தத் துணை மின் நிலையத்திலிருந்து 9 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின் பளுதான் இங்கே தேவையுள்ளதால்,

2013 ஏப்ரல் 30]

பொன்னமராவதி பேரூராட்சிக்குப் புதியதாக துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.

திரு. பி.கே. வைரமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தனத்துப் பொதிகையிலே பிறந்துவந்த சரித்திரமே, சாதனைகள் பல செய்து சங்கநாதம் ஒலிப்பவரே, வீரத்தின் விளக்கப் பெட்டகமே, விவேகத்தின் முழு விலாசமே, வெற்றிகளின் விளைச்சல் பூமியே, செங்கோட்டை போன்று கம்பீரமாய் நின்று வஞ்சகமற்ற வரலாறு படைக்கும் வருங்கால பாரதமே, (மேசையைத் தட்டும் ஒலி) சதிகள் ஒன்றுகூடி சதிராட்டம் போட்டாலும், புடம்போட்ட தங்கமாய் ஒளிரும் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) சங்கத் தமிழின் சுவாசக் காற்றே, ஒன்றரை கோடி தொண்டர்களின் உயிர் மூச்சே, நான் வணங்கும் தாய் உருவ தெய்வமே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

பொன்னமராவதி ஒரு வளர்ந்து வரும் நகரம். நகராட்சியாக தரம் உயர்த்துவதற்குப் போதுமான மக்கள்தொகையும், வருவாயும் உள்ள நகரம். பொன்னமராவதியைச் சுற்றிலும் உள்ள 10 ஊராட்சிகள் அனைத்தும் மக்கள்தொகை அதிகம் உள்ள பெரிய ஊராட்சிகள் ஆகும். எனவே, அதிகமாக விவசாய நிலங்களும், மின் மோட்டார்களும் உள்ளன. 110/11 கிலோ வோல்ட் திறன்கொண்ட கொன்னையூர் துணை மின் நிலையத்திலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வார்ப்பட்டு, திருக்கலம்பூர், வேந்தன்பட்டி ஊராட்சிகளுக்கு மின்சாரம் செல்லும்போது, குறைந்த மின் அழுத்தம் ஏற்படுகிறது. இதற்குத் தீர்வு காண்பதற்கு கூடுதல் மின்மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 ஏப்ரல் 30

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பொன்னமராவதி பகுதிக்கு கொன்னையூர் துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. அந்த கொன்னையூர் துணை மின் நிலையத்திலே 10 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின்மாற்றி இயங்கி வருகிறது. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள பொன்னமராவதி, கொன்னையூர் துணை மின் நிலையத்திற்குட்பட்ட அனைத்துப் பகுதிகளுடைய மின் பளுவே 9 எம்.வி.ஏ. அளவிலேதான் இருக்கின்றது. ஆகவே, அந்தப் பகுதியின் தேவைக்கு உட்பட்டுதான் மின் பளு இருக்கின்றது. இருந்தாலும்கூட, பொன்னமராவதி பகுதி ஒரு வளர்ச்சி பெற்றுவரும் பேரூராட்சியாகும். எனவே, அந்தப் பகுதியிலே மின் தேவை நாளுக்கு நாள் அதிகரிக்கக்கூடும் என்ற எண்ணத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதியிலே உள்ள 10 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின்மாற்றியை 16 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின்மாற்றியாக மாற்றுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.*

திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் தொகுதி, பொன்னமராவதியில் மின்சாரத் தேவைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக கூடுதல் மின்மாற்றி அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்ற நல்ல தகவலை அளித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெரியகுளம் தொகுதி, தேவதானப்பட்டி*

2013 ஏப்ரல் 30]

பேரூராட்சியைச் சுற்றியிருக்கக்கூடிய 10-க்கும் மேற்பட்ட விவசாயக் கிராமங்களுக்கு திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டில் இருக்கக்கூடிய துணை மின் நிலையத்திலிருந்துதான் இப்பொழுது மின்சாரம் வந்துகொண்டிருக்கின்றது. அதன் விளைவாக, குறைந்த அழுத்தத்தின் காரணமாக, விவசாயிகளின் மோட்டார்கள் பழுதடைவதும், மின்சாரப் பற்றாக்குறையும் தொடர்ந்து ஏற்பட்டு வருகிறது. கடந்த 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு இதுகுறித்து மின் துறையில் கோரிக்கை வைத்தபோது, அது ஆய்வு செய்யப்பட்டது. இன்னும் சொல்லப்போனால், நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடமும் தெரிவித்திருக்கிறார்கள். அது ஆய்வு செய்யப்பட்டும், இதுவரையிலும் நடவடிக்கைக்கு வரவில்லை. தொடர்ச்சியாக கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது. எனவே, அங்கே ஒரு துணை மின் நிலையம் அமைத்து, அந்த வட்டாரத்து விவசாயிகளுக்கும், தேவதானப்பட்டி பேரூராட்சிக்கும் உரிய மின்சார வசதி கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, பல்வேறு உறுப்பினர்கள் புதியதாக துணை மின் நிலையம் அமைப்பது குறித்து கேள்வி எழுப்புகிறார்கள். புதியதாக துணை மின் நிலையம் அமைப்பதிலே பல்வேறு வழிமுறைகள் இருக்கின்றன. அந்தப் பகுதியிலே மின் பளு அதிகரித்தால், இருக்கின்ற துணை மின் நிலையங்களில் தொழில்நுட்ப ஆய்வுகள் சாத்தியமாக இருக்குமானால், அந்தத் துணை மின் நிலையத்திலே போதுமான அளவிற்கு இட வசதியும் இருக்குமானால், தேவையான இடங்களிலெல்லாம் அங்கே இருக்கின்ற power transformer என்று சொல்லக்கூடிய மின்மாற்றியினுடைய திறனை உயர்த்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனுக்குடன் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற தேவதானப்பட்டி, வத்தலகுண்டுக்கு மின் வசதி எங்களுடைய பகுதியின் பக்கத்திலேயிருந்துதான் செல்கிறது. அந்தப் பகுதியிலே ஒட்டுமொத்தமாக மின் பளுவின் தேவை பற்றி ஆய்வு

செய்யப்பட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒருவேளை அங்கு கூடுதல் மின் பளு இல்லையென்று கண்டறியப்பட்டிருக்குமேயானால், அதனால் அந்தத் துணை மின் நிலையத்தில் புதிதாக மின்மாற்றி அமைக்கப்படாமலிருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, இப்பொழுது தேவதானப்பட்டி பகுதியும் வளர்ந்துவரும் ஒரு பகுதி என்பதால், அதையும் கருத்திற்கொண்டு, வருங்கால மின் பளு தேவையை உத்தேசித்து, ஆய்வு செய்து, அங்கே போதுமான அளவுக்கு மின் பளு இல்லையென்றாலும்கூட, வருங்காலத் தேவையை உத்தேசித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, வத்தலகுண்டு துணை மின் நிலையத்திலே கூடுதல் திறன்கொண்ட மின்மாற்றிகளை அமைத்து, அதன் மூலமாக அந்தப் பகுதிக்குத் தடையில்லாத, சீரான மின்சாரத்தை வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

முற்பகல் 10-10

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட மண்டைக்காடு பேரூராட்சியிலே, சேரன்மங்கலத்தில் ஒரு துணை மின் நிலையம் இருக்கிறது. அந்தத் துணை மின் நிலையத்திலிருந்துதான் பக்கத்தில் இருக்கும் முட்டம், இராஜாக்கமங்கலம் போன்ற பல கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. அதனால் மின் அழுத்தம் மிகக் குறைவாக இருக்கிறது. பரந்த பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படுவதால் மின் பற்றாக்குறை ஏற்பட்டு சரியாக மின்சாரம் கிடைக்கவில்லை. ஆகவே, முட்டம் பகுதியில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைத்துத் தந்தால் சீரான மின்சாரம் பெற வாய்ப்பிருக்கிறது. அந்தப் பகுதியிலே துணை மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய இடமும், சாத்தியக்கூறும் இருக்கின்றது. ஆகவே, அந்தப் பகுதியிலே துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முட்டம் பகுதியிலே புதியதாக துணை மின் நிலையம் அமைக்கவேண்டிய அவசியம் இருக்கிறதா என்பது குறித்து உரிய ஆய்வுகளை தமிழ்நாடு மின்சார வாரியம் மேற்கொள்ளும். அந்த ஆய்வுகளின் அடிப்படையில், அந்தப் பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் தேவையென்று சொன்னால், எம்மாதிரியான துணை மின் நிலையம் அங்கு தேவை என்பதைக் கண்டறிந்து, 110/11 கே.வி. வேண்டுமா அல்லது 33/11 கே.வி. வேண்டுமா என்பதை ஆய்வு செய்து, தேவையின் அடிப்படையில், மின் பளுவின் தேவையை அறிந்து, அதன் அடிப்படையிலே, அந்தப் பகுதியிலே துணை மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய அவசியம் பற்றி அரசு பரிசீலிக்கும்.

அதேநேரத்தில், இந்தத் துணை மின் நிலையம் அமைக்க சற்று காலதாமதம் ஆனாலுங்கூட, எந்தத் துணை மின் நிலையத்திலிருந்து இப்போது மின்சாரம் வழங்கப்படுகிறதோ, அந்தத் துணை மின் நிலையத்தின் தரத்தை உயர்த்தி, சீரான மின்சாரம் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்க இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 352, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

352—

தொழிற்பேட்டை

***20083—திரு. அ. கணேஷ்குமார்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,